# விருதுநகர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்:திரு.இரா.மதன்குமார்,எம்.ஏ.,எம்.எட்.,

மூ.மு.எண்.9049/அ1/ 2024 நாள்:[illegible].10.2024

பொருள்:– தமிழ்நாடு பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – கருணைஅடிப்படைப்பணி – விருதுநகர் மாவட்டம் – சிவகாசி கல்வி மாவட்டம் – நாரணாபுரம், அரசு மேல்நிலைப்பள்ளி இளநிலை உதவியாளர் திரு.ஆ.தாழேந்திரகுமார் – இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:– 1.விருதுநகர், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.7623/அ1/2022 நாள்.12.10.2022.

2.அரசு கடிதம் எண்.4419/தொ.க.1(1)/2021–1 நாள்.17.05.2024.

3.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.026062/ஜே/இ2/2023 நாள்.22.05.2024.

4. சென்னை – 06 தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.055197/ஜே/இ3/2023 நாள்:14.08.2024.

((((0))))

**ஆணை:**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி கல்வி மாவட்டம், நாரணாபுரம், அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆ.தாழேந்திரகுமார் என்பார் பார்வை (1)இல் காணும் செயல்முறையின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

தற்போது பார்வை (2)இல் காணும் அரசு கடிதம் எண்.4419/தொ.க.1(1)/2021–1 நாள்.17.05.2024 இல், இனிவரும் காலங்களில் அரசுக் கடிதம் எண்.5532/G/2023–1 மனித வளமேலாண்மைத் துறை நாள்.20.09.2023 இல் வெளியிடப்பட்டுள்ள தெளிவுரையின்படி விதித்தளர்வு தேவைப்படும் நேர்வுகளுக்கு மட்டும் அரசிற்கு கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை (2)இல் காணும் அரசுக்கடிதம் மற்றும் பார்வை (3)இல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளில் தெரிவித்துள்ளபடி, எந்தவித விதித் தளர்வும் தேவைப்படாததால், சிவகாசி கல்வி மாவட்டம், நாரணாபுரம், அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆ.தாழேந்திரகுமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் அன்னார் பணியேற்ற நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

D:\A1\Probation & Regularization -A1-2024.docx- 437 -

Scanned with CamScanner

## நிபந்தனைகள்

1. பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் முடித்த பின்னரே தகுதிகாண்பருவ ஆணை விளம்பப்படும்.
2. துறைத் தேர்வுகள் 2 ஆண்டுகள் காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.
3. தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூலினை 5 ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெறாவிட்டால் தனியார் மீது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 இல் பிரிவு 31 மற்றும் 33ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் தகுதிகாண் பருவ ஆணை விளம்பப்பட்ட பின்னரே வழங்கப்படும்.

**இணைப்பு:** அசல் பணிப்பதிவேடு, அசல் கல்விச்சான்றுகள் மற்றும் அசல் ஆவணங்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
விருதுநகர்.

**பெறுநர்:** சார்ந்த பணியாளர்,
(உரிய அலுவலர் மூலமாக).

**நகல்:** தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, நாரணாபுரம்.

D:\A1\Probation & Regularization -A1-2024.docx- 438 -

Scanned with CamScanner